# அமரர் சின்னதம்பி நாகமுத்து சுப்பிரமணியம் ஞாபகார்த்த புலமைப்பரிசில் நிதியம்



அமரர் சின்னதம்பி நாகமுத்து சுப்பிரமணியம் ஞாபகார்த்தமாக, அன்னாரது குடுப்பத்தினரால் **"அமரர் சின்னதம்பி நாகமுத்து சுப்பிரமணியம் ஞாபகார்த்த புலமைப்பரிசில் நிதியம்"** 20.12.2017 அன்று தாபிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிதியமானது யா/இடைக்காடு மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினால் நிர்வகிக்கப்படும்.

ஆரம்ப நிதி : ரூபா 500,000.00

முதன்மை நோக்கம் : இடைக்காடு மகா வித்தியாலய மாணவரின் விளையாட்டு செயற்றிறனை ஊக்கப்படுத்தல்

**புலமைப்பரிசில் நிதிய விதிமுறைகள் :**

மேற்படி நிதியத்தின் நிலையான வைப்பிலிருந்து பெறப்படக்கூடிய வட்டி தொகையிலிருந்து பின்வரும் புலமைப்பரிசிலகள் வழங்கப்படும்.

1. தேசிய மட்ட விளையாட்டுகளில் பங்கு பற்றியமை அல்லது வெற்றி பெற்றமைக்கான புலமைப்பரிசில்
2. மாகாண மட்ட விளையாட்டுகளில் வெற்றி பெற்றமைக்கான புலமைப்பரிசில்
3. வலய மட்ட விளையாட்டுகளில் வெற்றி பெற்றமைக்கான புலமைப்பரிசில்
4. மேற்படி மூன்றில் ஏதாவது ஒன்றுடன் பல்கலைக்கழகம் அல்லது கல்வியியற் கல்லூரியில் அனுமதி பெற்றவர்களுக்கான **விசேட புலமைப்பரிசில்**
5. ஒவ்வொன்றிற்குமான புலமைப்பரிசில் நிதித்தொகையளவு பழைய மாணவர் சங்கத்தினால் தீர்மானிக்கப்படும்

மேலும் தேசிய அல்லது மாகாண அல்லது வலய அல்லது கோட்ட மட்ட விளையாட்டுகளில் பங்கு கொள்வதற்கான போக்குவரத்து மற்றும் ஒழுங்கமைப்பு செலவுகளும் மேற்படி நிதியின் நிலையான வைப்பிலிருந்து பெறப்படக்கூடிய வட்டி தொகையிலிருந்து செலவு செய்யப்படலாம்.